# பண்டுவஸ்நுவர பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 19 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 09 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 09 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஏனைய வருமான அறவிடல் தலைப்பில் ரூபா 1,518,913 தொகையான மூலதனப் பெறுவனவுகள் உள்ளடக்கப்பட்டமையினால் ஏனைய வருமானம் ரூபா 1,518,913 இனால் அதிகரித்து மற்றும் மூலதன வருமானம் அந்த அளவினால் குறைத்தும் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பணம் இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிராததுடன் 2012 இன் 2 மாதத்தில் பெறப்பட்ட நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 3,076,853 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா

1,725,418 தொகை ஆண்டின் நீதிமன்றத் தண்டப் பண பெறுவனவாகக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்காக ாநீதிமன்றத்தண்டப்பணம் கிடைத்திருக்காத போதிலும் முன்னைய ஆண்டிற்காக நீதிமன்றத் தண்டப் பணம் கிடைத்திருக்காத போதிலும் முன்னைய ஆண்டின் நிலுவை பெறுவனவாக ரூபா 600,000 தொகை கழிக்கப்பட்டு ரூபா 4,202,271 தொகை ஆண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பணமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2012 மற்றும் 2013 சனவரி மாதத்திற்காக 2013 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 6,538,956 தொகையான நீதிமன்றத் தண்டப் பணங்களிலிருந்து மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய அளவு இனங்காணப்பட்டு கடன்பட்டோரின் கீழ் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டணம் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிராததுடன் உரிய பதிவேட்டின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 2,000,000 தொகை மற்றும் 2011 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 281,750 தொகை 2013 ஆம் ஆண்டில் கிடைத்திருந்ததுடன் அதன் பெறுமதி கடன்பட்டோராக்கப்பட்டிராததுடன் ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டண அளவும் கடன்பட்டோராக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஆண்டின் போது முத்திரைக் கட்டணமாகக் கிடைத்திருந்த ரூபா 1,725,418 தொகை நீதிமன்றத்தண்டப் பணமாக கணக்கு வைக்கப்பட்டமையினால் நீதிமன்றத் தண்டப் பணம் அதே அளவினால் அதிகரித்தும் முத்திரைக் கட்டணம் அதே அளவினால் குறைத்தும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆண்டின் முத்திரைக் கட்டணம் வருமானத் தலைப்பில் ரூபா 72,556 தொகை செலவு வைக்கப்பட்டு அதில் முன்னைய ஆண்டிற்காக கிடைக்க வேண்டியதாக ரூபா 5,000,000 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் முத்திரைக் கட்டண வருமானத் தலைப்பில் ரூபா 4,927,444 மறை மீதி எழுத்திருந்ததுடன் அதன் காரணமாக வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் சேவைக்கட்டண வருமானம் ரூபா 2,102,532 தொகையான மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது.

(உ) பதிவேட்டின் பிரகாரம் நீர்க்கட்டண பட்டியலிடல்கள் ரூபா 1,551,996 ஆக இருந்த போதிலும் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 592,054 தொகை மாத்திரம் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்தமையினால் நீர்க்கட்டண வருமானம் ரூபா 959,942 தொகை குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. நீர்க்கட்டண பதிவேட்டின் பிரகாரம் நிலுவை ரூபா 1,545,788 தொகையாக

இருந்ததுடன் அந்த நிலுவை நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பாதீட்டின் பிரகாரம் மூலதனச் செலவிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 4,852,150 தொகைக்குரிய செயற்திட்டங்கள் குறிப்பாக இனங்காணப்படாமல் ரூபா 4,852,150 மொத்தத் தொகையும் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(எ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடன்கொடுத்தோர் மீதியான ரூபா 53,951,615 தொகையில் 2012 ஆம் ஆண்டு வரையில் தீர்க்கப்படாது காணப்பட்ட 2009 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 3,740,585 தொகையும், 2010 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 9,417,761 தொகையும் மற்றும் 2011 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 7,513,060 தொகையும் வைக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் இறுதியிலான கடன்கொடுத்தோர் ரூபா 20,671,406 தொகை அதிகரித்து கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஏ) மூலதன உதவி மற்றும் மூலதனச் செலவினங்கள் தனித்தனியாக இனங்காணப்படாமல் ஆண்டின் போது கிடைத்த ரூபா 53,533,107 தொகை மற்றும் செலுத்தப்பட்ட ரூபா 63,511,186 தொகை மாத்திரம் மூலதன உதவி மற்றும் மூலதனச் செலவினமாக நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 124,864,827 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 10,042,545 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,690,504 ஆக இருந்தது.

## 2.2. நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஆண்டின் இறுதியில் ரூபா 161,144 அறவீடுகள் நிலுவையாக இருந்த 21 ஊழியர் கடன்மீதிகள் காணப்பட்டதுடன் அதில் ரூபா 65,250 தொகையான 2 கடன் மீதிகளுக்குரிய நபர்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அறவீடுகள் பிரச்சினைக்குரியதாகக் காணப்பட்டது. ரூபா 95,894 பெறுமதியான எஞ்சிய 19 கடன் மீதிகளுக்குரிய நபர்கள் இற்றை வரையிலும் சேவையாற்றுகின்ற நிலையம் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்த வேண்டிய நீண்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,389,432 தொகைனயான மீதி காணப்பட்டதுடன் அது தொடர்பாக பரீட்சித்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,072 | 673 | 587 |
| (ii) | வாடகை | 13,951 | 13,073 | 498 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,245 | 14,799 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 45,512 | 25,318 | 40,388 |

**2.3.2 வாடகை**

ஆண்டின் இறுதியில் காணப்பட்ட வாடகை நிலுவையான ரூபா 418,047 தொகையில் 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 273,284 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்**

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் விதி இல. 59 இன் பிரகாரம் வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடுவதற்குரிய சபையினால் சபை அதிகாரப் பிரதேசத்தில் மெய்மையாய்வை மேற்கொண்டு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் கைத்தொழில்கள் தொடர்பான பட்டியல் தயாரித்து நடவடிக்கை எடுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களுக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த ஹோட்டல்களின் அல்லது சிற்றுண்டிச்சாலைகளில் புரள்வின் அடிப்படையில் 1 சதவீதத்தை விஞ்ஞாத கட்டணம் அறவிடவேண்டி இருந்த போதிலும் சபையினால் அவ்வாறு இனங்காணப்பட்டிருந்த ஒரு நிறுவனத்திற்காக மாத்திரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா 3,000 கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.3.4 நீர்க்கட்டணம்**

(அ) ஆண்டின் இறுதியில் நீர்க் கட்டணம் நிலுவையாக ரூபா 1,545,788 தொகை காணப்பட்டது. குருணாகல் வீதி நீர்ப்பாவனையாளர்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 18 நீர்ப்பாவனையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதி ரூபா 402,004 தொகையாகக் காணப்பட்ட போதிலும் அவைகளை அறவிடுவதற்கோ அல்லது வழங்கலைத் துண்டிப்பதற்கோ சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. உரிய பிரகாரம் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமையினால் உரிய நிலுவைப்பண அறவீடுகளும் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையின் நீர்ப் பிரிவிற்கு ஆண்டின் போது நீரைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 1,904,835 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், வருடாந்த பட்டியலிடல்கள் ரூபா 1,551,996 ஆனமையால் மொத்த நீரையும் கொள்வனவு செய்வதின் கீழ் சபைக்கு மேலதிகமாக ரூபா 352,839 தொகைகளைச் செலவிட வேண்டியேற்பட்டது. அதன் கீழ் 475 நீர்ப்பாவனையாளர்களுக்கு நீர் வழங்கல் வழங்கப்பட்டிருந்த போதிலும் 42 நீர் இணைப்புக்களுக்குரிய நீர்மாணி செயற்பாடற்றுக் காணப்பட்டமையும், அந்த நீர்ப் பாவனையாளர்களின் முன்னைய மாதங்களின் நீர்ப்பாவனையின் சராசரியைக் கவனத்தில் கொண்டு கட்டணம் அறவிடப்படாமல் மாதாந்தம் ரூபா 50 படி நீர்க்கட்டணம் பட்டியலிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 1,545,788 தொகையான நிலுவை தொடர்பான காலப்பகுப்பாய்வை வழங்குவதற்கு சபையினால் முடியாதிருந்தது.

### 2.3.5 தொலைபேசி பரிவர்தனைக் கோபுரங்களுக்கான செயன்முறைக் கட்டணம்

சபை அதிகார பிரதேசத்தில் 2 தொலைபேசி கோபுரங்களுக்குரிய தகவல்கள் மாத்திரம் ஆவணப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஒரு கோபுரத்திற்காக ரூபா 200,000 படி செயன்முறைக் கட்டணம் அறவிடப்பட்டு வைப்புக் கணக்கில் செலவில் பதியப்பட்டிருந்ததுடன் வியாபார அனுமதிப்பத்திரம் அல்லது வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கால ரீதியாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்கள் தொடர்பான இனங்காணல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 வாகன நிறுத்திவைத்தல் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குரிய உப விதிகள் காணப்பட்ட போதிலும் முச்சக்கரவண்டி நிறுத்தி வைப்பதற்குரிய வருடாந்த அல்லது காலரீதியாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முச்சக்கர வண்டிகளை பதிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.8 கடைகளை வாடகைக்கு விடல்

(அ) ஹெட்டிப்பொல புதிய சந்தைத் தொகுதியில் 12 ஆம் இலக்க கடையை வாடகைக்கு விடுவதற்காக முறையே ரூபா 776,000 மற்றும் ரூபா 693,100 படி கூறுவிலைகள் இரண்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் கேள்வி கையளித்தலின் போது உரிய காரணம் காண்பிக்கப்படாது 2 ஆவது கூறு விலையான ரூபா 693,100 கூறு விலை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் ஒரே தடவையில் செலுத்துவதற்குரிய சபையினால் கையொப்பம் இடப்பட்ட உடன்படிக்கை ரூபா 776,000 தொகைக்கு கோரிய வாடகையாளரின் பெயரில் சைச்சாத்திடப்பட்டிருந்தது. சபையினால் மேற்கூறப்பட்ட பிரகாரம் கேள்வி வழங்கப்பட்ட தரப்பினருக்குப் புறம்பான நபரினால் ஒரே தடவையில் செலுத்தும் பணம் மற்றும் வாடகைப் பணம் செலுத்தப்பட்ட காரணத்தினால் தற்போது வரையிலும் அந்தக் கடை தொடர்பான உடன்படிக்கை பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி செயற்திட்டக் கடனுதவியின் கீழ் ரூபா 41,128,218 தொகை செலவிடப்பட்டு 2011 இன் இறுதி அரைப்பகுதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட பன்டுவஸ்நுவர புறச் செயற்பாட்டுக் கட்டிடத்தின் கடைகள் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் உரிய காலப்பகுதியில் மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு விடப்பட்டிருக்கவில்லை. 4 கடைகள் ரூபா 30,000 தொடக்கம் 50,000 இற்கிடையிலான மாதாந்த வாடகையில் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் வாடகைக்கு விடப்பட்டிருந்த போதிலும் எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமையின் காரணமாக உரிய மதிப்பீட்டினைச் செய்ததன் பின்னர் குறிப்பிட்ட கட்டணத்தை அறவீடு செய்தல் பிரச்சனைகளுக்குரியதாகக் காணப்பட்டது. கடன் தவணை மற்றும் வட்டியாக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 1,198,391 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

(அ) நிதிக்கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 94,823,211 ஆகக் காணப்பட்டது. 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் விதி 218 இன் பிரகாரம் சகல காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தளபாடமும் பொருத்திகளும் மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தச் சொத்துக்களின் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் பெறுமதியிடப்பட்டிருக்கவில்லை. பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் அந்தச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,368,612 ஆக காணப்பட்டது. பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் காணப்பட்ட இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் ரூபா 15,036,700 தொகை மற்றும் மோட்டார் வாகனமும் வண்டியும் ரூபா 10,309,035 தொகைகள் மெய்மையாய்வு செய்யப்பட்டமையை இனங்காண முடியாதிருந்தது.

**2.5 மனிதவள முகாமைத்துவம்**

சபையில் அங்கீகரிக்க்பபட்ட பதவியணியினர் எண்ணிக்கை 81 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 69 ஆனமையால் வெற்றிடம் 12 ஆகக் காணப்பட்டதுடன் அதனுள் 02 நூலகர் பதவியில் 01 வெற்றிடம் காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக தற்காலிக அல்லது ஒப்பந்து அடிப்படையில் 19 பேர்கள் சேர்க்கப்பட்டு சபை நிதியத்திலிருந்து சம்பளம் செலுத்தப்படுகின்றது.

**2.6 சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஹெட்டிபொல மாட்டிறைச்சிக் கடையின் 2006 ஆம் ஆண்டிற்குரியதாகக் காணப்பட்ட ரூபா 151,125 நிலுவைத் தொகைக்கான வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் வாடகையாளரின் சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு உரிய பணத்தை அறவீடுசெய்வற்கு 2011 ஆம் ஆண்டின் போது பிஸ்காலுக்கு கட்டளை வழங்கப்பட்டதாக வாய்மூல விளக்கமளித்தல்களின் பிரகாரம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மடிகே அனுக்கனை மாட்டிறைச்சிக் கடையில் 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளுக்குரியதாகக் காணப்பட்ட ரூபா 146,020 தொகையான நிலுவை தொடர்பான வழக்கில் உரிய வாடகையாளர் வெளிநாடு சென்றிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹெட்டிப்பொல கோழி இறைச்சிக் கடையில் 2007 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 71,975 தொகையான நிலுவை தொடர்பான வழக்கிற்குரிய தீர்ப்பின் பிரகாரம் ரூபா 5,000 படி சபைக்குச் செலுத்துவதற்கு வாடகையாளருக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், 6 தவணைகள் செலுத்தி 2012 ஆகஸ்ட் தொடக்கம் செலுத்துவதிலிருந்து விலகியிருந்த போதிலும் ரூபா 41,975 தொகையான நிலுவை அறவிடுவதற்கு மீள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1993 ஆம் ஆண்டின் போது வடமேல் பிரதேச போக்குவரத்துச் சபையினால் சபைக்குக் கையளிக்கப்பட்ட காணியில் அமைந்துள்ள கட்டத்தில் வெளிநபர் ஒருவரினால் அனுமதியற்ற வியாபார நியைமொன்று நடாத்திச் செல்வது தொடர்பாக 2010 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்பட்டிருந்த போதிலும் அந்த வழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) மாகாண உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட உதவியின் கீழ் மீளாய்வாண்டின் இறுதிவரையில் பூர்த்தி செய்யப்பட்ட பன்டுவஸ்நுவர புறச் செயற்பாட்டு கட்டிடத்திற்காக ரூபா 41,022,051 தொகையான ஒப்பந்தப் பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 4,395,219 தொகையான பெறுமதி சேர்வரியின் அளவு சபையினால் வரிக் கணிப்பீடு செய்யும் போது செலுத்தப்பட்ட வரியாக கவனத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை நிதியத்தின் கீழ் 2008 - 2011 ஆம் காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்குரிய 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தக்கார கம்பனிகளுக்கு முறையே ரூபா 3,856,035 தொகை மற்றும் ரூபா 2,009,447 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 485,467 தொகை மற்றும் ரூபா 574,226 தொகையான பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின்

அளவு அந்த வருடங்களில் வரி கணிப்பீட்டின் போது செலுத்தப்பட்ட வரியாக கவனத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் சிறு கொங்கிரீட் கற்கள் செயற்திட்டத்திற்காக உள்ளூராட்சித் திணைக்களத்தினால் ரூபா 400,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையில் 2011 நவம்பர் 25 ஆந் திகதி ரூபா 275,500 தொகை செலவில் இரண்டு கொங்கிரீட் சிறு கற்கள் உற்பத்திசெய்யும் இயந்திரம் மற்றும் 2012 யூலை 10 ஆந் திகதி ரூபா 124,500 செலவில் கொங்கிரீட் சிறு கற்கள் தயாரிக்கும் பலகைத் தட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2012 ஆம் ஆண்டின் போது சபையினால் கமநெகும நிகழ்சித்திட்டத்தின் கீழ் மாத்திரம் 20 வீதிகளுக்காக ரூபா 250,000 பெறுமதியில் கொங்கிரீட் சிறு கற்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 2.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற குப்பைகள் 10 ஏக்கர் அளவான தனியார் காணி ஒன்றில் குழிகள் வெட்டப்பட்டு போடப்பட்டிருந்ததுடன் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டமோ அல்லது கூட்டுப்பசளை உற்பத்தி செயற்திட்டமோ சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.9 செயலாற்றல்

ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 26,573,000 பெறுமதியான நலன்புரி மற்றும் 8 மூலதன செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்
(ஊ) மனித வள முகாமைத்துவம்
(எ) வாகனப் பயன்பாடு